DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 135/2024 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| Name | : | **சின்னம்மாள்** |
| Huspand Name | : | **ஆண்டிக்காளை** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 12.03.2026

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேங்கைப்பட்டியில் குடியிருந்து சிங்கம்புணரியில் உள்ள பஞ்சு கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 சண்முகசுந்தரம் மற்றும் அ.சா.2 சாந்தி ஆகியோர்களை என்பவர்களை தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். வழக்கின் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 13 வருடங்களுக்கு முன்பு மதியம் 3.30 மணியளவில் அ.சா.1 சண்முகசுந்தரம் என்பவர் வீட்டிற்கு பால் வாங்குவதற்கு நான் சென்றேன். அப்போது எதிரி அங்கு வந்து அ.சா.1 சண்முகசுந்தரத்துடன் பிரச்சினை செய்து கல்லால் அவரது வீட்டின் ஓட்டை உடைத்து விட்டார். பின்பு எதிரி அருகிலிருந்த அ.சா.2 சாந்தி என்பவரை அவரது நெற்றியில் காலால் மிதித்து தள்ளிவிட்டார். அதன்பிறகு அ.சா.1 சண்முகசுந்தரம் சா'ந்தியை சிகிச்சைக்காக மருத்துவமனை அழைத்து சென்றார்.

வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை ஊரில் வைத்து விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

ஆஜர் எதிரியின் தம்பி கண்ணனை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அ.சா.1 சண்முகசுந்தரத்திற்கும் எதிரிக்கும் மற்றும் கண்ணன் என்பவருக்கும் வயலில் பிரச்சினை நடந்தது தெரியுமா என்றால் தெரியாது, கேள்விப்பட்டேன். அதன் தொடர்ச்சியாக வாக்குவாதம் நடந்தது என்றால் சரிதான். பொதுவாக பால் மாலை 4.00 மணிக்கு மேல் தான் கறப்பார்கள் என்றால் எங்கள் ஊரில் 3.30 மணிக்கு கறந்துவிடுவார்கள். போலிசார் என்னை விசாரிக்கும்போது அ.சா.1 சண்முகசுந்தரத்தின் வீட்டு ஓட்டை கண்ணன் என்பவர் உடைத்த விபரத்தை நான் சொன்னேனா என்றால் இல்லை. போலிசார் வந்து கேட்கும்போது கற்களை காண்பித்தேனா என்றால் ஆமாம். கல்லின் எடை எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 1கிலோ அளவில் 3 கற்கள் கிடந்தன. சம்பவம் நடந்த அன்றே போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஞாபகமில்லை. அ.சா.2 சாந்தியை அவரது வீட்டிற்குள் வைத்து தான் எதிரி மிதித்தார் என்றால் ஆமாம். நான் வீட்டிற்கு வெளியே நின்றேன் என்றால் சரிதான். நான் வெளியில் நின்றிருந்ததால் எதிரி எந்த இடத்தில் மிதித்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சாந்திக்கு நெற்றியில் அடிபட்டு வீக்காயம் இருந்தது. அந்த காயத்திற்கு தான் மருத்துவமனை அழைத்து சென்றார் என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் அ.சா.1 சண்முகசுந்தரம் கேட்டுக்கொண்டதால் நான் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.12 17:47:18 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**